


Signature Not Verified

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், கடையக்குடி ஊராட்சி மற்றும் பெருங்குடி கிராமம், நில அளவை எண்கள்: 9/5- இல் அமையும் குடியிருப்பு (சமத்துவபுரம்) மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்
(திட்டமில்லாப்பகுதி)

இணையதள விண்ணப்ப எண்: NHYQ0T1E/**2024**
அளவு திட்டம்: 1:600

வ

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் எல்லை | - |
| நிலையிலுள்ள சாலை | - |
| மனைப்பிரிவு உத்தேச சாலை | - |

கோரப்பட்ட மனைகளின் எண்ணிக்கை -100
ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை-100

## பரப்பளவு விபரம்

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு | = 48600.00 சமீ (12.00ஏக்கர்) |
| சாலையின் பரப்பளவு மூலைமுடக்கு உட்பட | = 9801.00 சமீ |
| மனையிடங்களின் மொத்தப்பரப்பளவு | = 38799.00 சமீ |

சமத்துவபுரம் அரசு திட்டம் என்பதால் குறைந்த வருவாய் பிரிவிற்கென தனியாக தற்போதய ஒப்புதலில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை

## பொது ஒதுக்கீடுகள்:

(மனைப்பிரிவு இடம் உள்ளாட்சிக்கு உரிமையாக உள்ளதால் பின்வரும் பொது ஒதுக்கீடுகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட தேவை எழவில்லை)

| | | |
|---|---|---|
| பூங்கா | - | 3963.00 சமீ (10.21%) - |
| உள்ளாட்சி உபயோக மனை | - | 384.00 சமீ (0.98%) - |
| தமிழ்நாடு மின்உற்பத்தி (ம)பகிர்மான கழக (TANGEDCO) உபயோக மனை | - | 232.00 சமீ (0.59%) - |
| உத்தேச மனைப்பிரிவு சாலைகள் | - | |

## கட்டிட பக்க திறவிட வரம்பு:

அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019 (TNCDBR -2019)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டிட பக்க திறவிடம் விடப்பட வேண்டும்

## மூலை முடக்கு:

சாலையின் அகலம் 12.0மீ. வரை 1.50மீ 1.50மீ, சாலையின் அகலம் 12.0மீ முதல் 30.50மீ வரை 4.50மீ X 4.50மீ மற்றும் 30.50மீ மேல் 6.0மீ 6.0மீ என்ற அளவில் விடப்பட வேண்டும்.

### நிபந்தனைகள்:

1) இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடத்தில் எவ்வித நில ஆர்ஜித நடவடிக்கையும் இல்லை என்பதையும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட அலுவலரால் பெறப்படவில்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2) அரசாணை எண்: 71 ஊ.வ. (ம) உ. துறை நாள்: 16.06.2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சியினால் வழங்கப்படும் சான்று மற்றும் அரசாணை எண்: 18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்:4.2.2019 -ன் படிவங்களின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

3) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

4) விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வானையின் நகலோடு, நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' அளவிளான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6) உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

7) The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

8) அரசாணை எண்: 79 வீ.வ. (ம) ந.வ. துறை, நாள்: 4.5.2017 -ன் படி இந்த உத்தேச மனைப்பிரிவிற்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 -ம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47 -ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்ணயம் செய்து, அரசுக் கணக்குத் தலைப்பின் கீழ் வரவு வைத்து, செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதி அளிக்க வேண்டும்.

குறிப்பு: அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# SWP/LP/DTCP(PD) NO:133/2024

இணையதள ஒப்புதல்
(இசைன் செய்யப்பட்டது)
இணை இயக்குநர் / துணை இயக்குநர் (கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை மாவட்டம்.